## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

*******

IN THE COURT OF DISTRICT MUNSIF–CUM–JUDICIAL MAGISTRATE,

**PALLAVARAM.**

| | |
|---|---|
| CC.No. | 107/2025 |
| Prosecution: | அ.சா.1 |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for Name** | ~ | ஈஸ்வரி |
| **Father/Husband Name** | ~ | பாபு |
| **Village** | ~ | |
| **Taluk** | ~ | |
| **Caste** | ~ | |
| **Calling** | ~ | |
| **Religion** | ~ | |
| **Age** | ~ | |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day **of Dt. 18.02.2026.**

**முதல் விசாரணையின் தொடர்ச்சி**

நான் 19.03.2018 ஆம் தேதியிட்ட பதிவு செய்யப்படாத கிரைய பத்திரத்தின் அசல் ஆவணத்தை தற்போது நீதிமன்றத்தில் ஆஜர் செய்தேன். ( 19.03.2018 தேதியிட்ட பதிவு செய்யப்படாத கிரைய பத்திரம் நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது)) **அ.சா.ஆ. 2 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. போலீசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. எதற்காக யார் மீது புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால் மணி சோனா ராஜேந்திரன், வெங்கடேசன் ஆகியோர் மீது புகார் கொடுத்துள்ளேன். மேற்படி நபர்கள் தங்களுக்கு சொந்தமாக அரை கிரவுண்ட் இடம் உள்ளதாகவும் அதில் கால் கிரவுண்ட் 5 லட்சத்திற்கு விற்பனைக்கு தருவதாகவும் சொன்னார்கள் ஆனால் தான் வீட்டு வேலை செய்து வருவதால் அவ்வளவு கொடுக்க முடியாது என்றும் அதனால் மூன்று லட்சம் கொடுக்க முடியும் என சொன்னேன். மூன்று லட்சத்தை கொடுத்து அந்த இடத்தை வாங்கினேன்.

20000 கொடுத்து மின் இணைப்பு பெற்றேன். சொத்தை விற்பனை செய்வதாக யார் என்னிடம் சொன்னார்கள் என்றால் சோனா மணி ஆகியோர் சொன்னார்கள். பணத்தை யாரிடம் கொடுத்ததாக சொல்கிறீர்கள் என்றால் சோனா மணி ஆகியோரிடம் கொடுத்தேன் ராஜேந்திரன் வெங்கடேசன் ஆகியோருக்கு ஏதேனும் தொகை கொடுத்தீரா என்றால் நான் தொகை எதுவும் கொடுக்கவில்லை.நான் தாக்கல் செய்த கிரய ஆவணத்தில் மணி மற்றும் சோனா ஆகியோர் மட்டுமே கையொப்பம் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கிரயம் பெற்ற சொத்தானது யாருக்கு சொந்தமானது என புகாரில் குறிப்பிட்டுள்ளீரா என்றால் சோனா என்பவருக்கு சொந்தமானது என சொல்லி உள்ளேன். போலீசார் விசாரணையில் மேற்படி கிரையம் வாங்கிய சொத்தானது சோனா என்பவரின் உறவினருக்கு சொந்தமான சொத்து என சொல்லி உள்ளேன் என்றால் சரிதான்.சோனா என்பவரின் தாயாருக்கு சொந்தமான சொத்து என சொல்லி தான் எனக்கு கிரயம் செய்து கொடுத்தார்கள்.

2. நான் கொடுத்த புகார் மனுவிலும் போலீசார் விசாரணையிலும் சோனா என்பவரின் தாயாருக்கு சொந்தமான சொத்தை தான் கிரயம் செய்து கொடுத்ததாக சொல்லி உள்ளீரா என்றால் சொல்லி உள்ளேன். மேற்படி கிரைய பத்திரம் எப்போது ஏற்படுத்தப்பட்டது என்றால் தற்போது தேதி ஞாபகம் இல்லை எட்டு வருடங்களுக்கு முன்பு ஏற்படுத்தினேன் எனக்கு படிப்பறிவு இல்லை. மேற்படி சொத்தானது சோனா என்பவரின் அனுபவத்தில் உள்ள சொத்து என சொல்லி மின் கட்டண ரசீது மற்றும் வீட்டு வரி ரசீது ஆகியவற்றை என்னிடம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி கிரைய பாத்திரம் பதிவு செய்யப்படாத பத்திரம் என்றால் சரிதான். மேற்படி சொத்தானது சோனா என்பவரின் அனுபவத்தில் உள்ள சொத்து என்பதால் பதிவு செய்யப்படாத கிரைய ஆவணம் மூலம் சொத்தை விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான்.மேற்படி ஆவணமானது பதிவு செய்யப்படாத ஆவணம் என்பது அது தொடர்பான பதிவுகள் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவாகி இருக்காது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது அந்த கிரையாவணத்தை எதிரிகள் தான் டைப் அடித்து எடுத்து வந்தார்கள். புகாரிலும் போலீசார் விசாரணையிலும் எதிரிகள் தான் கிரைய ஆவணத்தை டைப் அடித்து எடுத்து வந்தார்கள் என சொல்லி உள்ளீரா என்றால் சொல்லி உள்ளேன் .

3. மேற்படி இடம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அலுவலகத்தில் சென்று பார்த்தபோது அந்த இடம் சோனாவிற்கு சொந்தமான இடம் கிடையாது என தெரிந்ததாக போலீசார் விசாணையில் குறிப்பிட்ட நிலையில் எந்த அலுவலகத்திற்கு சென்றீர்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. எதிரிகள் பணத்தை பெற்றுக் கொண்டு அந்த இடத்தை என்னிடம் கொடுத்து விட்டார்களா என்றால் ஆமாம். இடத்தை யார் என்னிடம் ஒப்படைத்தார்கள் என்றால் மணி மற்றும் சோனா ஆகியோர் ஒப்படைத்தார்கள். மணி மற்றும் சோனா ஆகியோர் மட்டுமே என்னிடம் இருந்து தொகையை பெற்றுக் கொண்டு இடத்தை எனது வசம் ஒப்படைத்தார்கள் என்றால் சரிதான்.இடத்தை ஒப்படைத்த பின்னிட்டு எந்த தேதியில் அந்த இடத்தில் வேலையை ஆரம்பித்தீர்கள் என்றால் மறு மாதம் ஆரம்பித்தேன் தேதி எனக்கு தெரியவில்லை. நான் கொடுத்த புகார் மனுவில் 19 3 2018 அன்று மணி மற்றும் சோனா ஆகியோரிடம் மூன்று லட்சம் கொடுத்துவிட்டு பதிவு செய்யப்படாத கிரைய ஆவணம் எழுதி பெற்றதாகவும் 10 2 2018 அன்று வீடு கட்ட வேலை பார்த்ததாக சொல்லி உள்ள நிலையில் மேற்படி இடத்தில் கிரயம் பெற்ற மறு மாதம் வேலை தொடங்கியதாக சாட்சியமளித்த நிலையில் 10 2 2018 அன்று வீடு கட்ட வேலை பார்த்ததாக சொல்லியுள்ளது தவறானது என்றால் சரியல்ல.

4. அதற்கு முன்பாக நான் அந்த இடத்தில் கூரை வீடு காட்டினேன். ஆனால் அதனை எரித்து விட்டார்கள். நான் கொடுத்த புகாரில் மணி சோனா ராஜேந்திரன் ஐசக் ஜெயராமன் வெங்கடேசன் ஆகியோருடன் ஊர் கட்டப்பஞ்சாயத்து காரர்கள் அழைத்து வந்து வேலையை நிறுத்தி விட்டார்கள் என்றும் மேலும் 3 லட்சம் தொகை கொடுக்குமாறு கேட்டு மிரட்டியதாக சொல்லியுள்ள நிலையில் மேற்படி ஊர் கட்ட பஞ்சாயத்து காரர்கள் யார் யார் என அவர்களது விபரங்களை போலீசார் விசாரணையில் சொல்லி உள்ளீரா என்றால் சொல்லி உள்ளேன். மேற்படி 600 சதுர அடி மனையில் ஜல்லி மணல் செங்கல் ஆகியவற்றை இறக்கி எவ்வித வேலையும் செய்ய முடியாது என்றால் சரியல்ல. மே சொன்ன கட்டுமான பொருட்கள் எவ்வளவு அளவில் இடத்தில் இறக்கி வைத்தேன் என புகாரிலோ போலீசார் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சொல்லி உள்ளேன். நான் கொடுத்த புகாரில் யார் யார் என்னை அடித்ததாக சொல்லி உள்ளீரா என்றால் சொல்லி உள்ளேன்.

5. யார் யார் என்னை அடித்தார்கள் என்றால் ராஜேந்திரன் வெங்கடேசன் ஐசக் மற்றும் திருநங்கையாக மாறிய மற்றொருவர் அடித்தார்கள். மேற்படி திருநங்கையாக உள்ள நபரை புகாரில் குறிப்பிட்டுள்ளீரா என்றால் இல்லை. மேற்படி ஊர் கட்டப்பஞ்சாய்த்தார்கள் என குறிப்பிடும் நபர்கள் என்னை அடித்தார்களா என்றால் இல்லை.மேற்படி இடத்தில் கட்டிட வேலை செய்த நபர்களை பெயர்களை புகாரில் குறிப்பிட்டுள்ளீரா என்றால் இல்லை. போலீசார் விசாரணையில் கட்டட வேலை செய்த நபர்களின் பெயர்களை சொன்னீர்களா என்றால் அவர்களது பெயர் எனக்கு தெரியவில்லை அதனால் சொல்லவில்லை.கட்டுமான பொருட்களை மேற்படி இடத்தில் இறக்கி வைத்திருக்க முடியாது என்றாலும் அவ்வாறு இறக்கி வைத்திருந்தால் அதற்குண்டான அளவுகள் கொடுத்து இருப்பேன் என்றாலும் மேற்படி கட்டுமான பொருட்கள் எதுவும் திருடி செல்லப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி இடமானது காலியிடம் என்றாலும் காலியாக உள்ள இடத்தில் சிமெண்ட் மூட்டைகள் இறக்கப்பட மாட்டாது என்றால் சரி அல்ல நான் சிமெண்ட் மூட்டை இறக்கி வைத்திருந்தேன். முதல் தகவல் அறிக்கை எப்போது பதிவு செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது அது பற்றி எனது மகனுக்கு தான் தெரியும்.

6. எனக்கும் எதிரிகளுக்கும் இடம் சம்பந்தமான உரிமையியல் பிரச்சனை என்றாலும் எனக்கு விற்பனை செய்த இடத்தை தொகை பெற்றுக் கொண்டு விற்பனை செய்தது மணி மற்றும் சோனா தான் என்றாலும் ராஜேந்திரன் மற்றும் வெங்கடேசன் ஆகியோர்களுக்கு எவ்வித தொடர்பும் கிடையாது என்றால் சரி அல்ல முதலில் இடத்தை மணி மற்றும் சோனா ஆகியோருக்கு சொந்தமானது என சொல்லி விற்பனை செய்தார்கள் அதன்பின் தான் ராஜேந்திரன் வெங்கடேசன் ஆகியோர்கள் அந்த சொத்தில் என்னிடம் பிரச்சனை செய்தார்கள். என்னிடமிருந்து மணி மற்றும் சோனா ஆகியோர் பெற்ற தொகைக்கு இடத்தை எனக்கு விற்பனை செய்து விட்டதால் மேற்படி நபர்களுக்கு எதிராக எவ்வித வழக்கும் எழவில்லை என்றால் சரியல்ல.நான் முதல் விசாரணையில் சொல்லியதை போல் எந்த ஒரு கட்டுமான பொருட்களும் கிரயம் பெற்ற இடத்தில் இறக்கப்படவில்லை என்றாலும் எதிரிகள் யாரும் நான் முதல் விசாரணையில் சொல்லி உள்ளதுபோல் என்னை மிரட்டவில்லை என்றால் சரியல்ல.

7. எனக்கும் எதிரிகளுக்கும் ஏற்பட்ட பிரச்சனையானது உரிமையியல் சம்பந்தமான பிரச்சினை என்றாலும் குற்ற வழக்கு ஏதும் ஏற்படவில்லை என்றாலும் நான் எனது அதிகாரத்தை பயன்படுத்தி அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி தவறாக எதிரிகள் மீது புகார் மனு கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல எதிரிகள் இவ்வழக்கில் இருந்து விடுதலை பெறத்தக்கவர்கள் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

**S/d C.P. Mullai Vanan**
District Munsif-cum
Judicial Magistrate
Pallavaram.